மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் [1986 மே 13

தான், அதன்பேரிலே தனியாக திருத்தங்கள் கொண்டுவர வேண்டும். இன்று கொண்டு வந்த ஒரு திருத்தத்தோடு அதை இணைக்க இயலாது. அதைத் தனியாக கொண்டுவரலாம். தனியாக ஆலோசிக்கலாம் என்று எடுத்துச் சொல்லி இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு இனாம் எடுத்து விடுதல் தொடர்பான (நடவடிக்கைகளை செல்திறனாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு இனாம் எடுத்துவிடுதல் தொடர்பான (நடவடிக்கைகளை செல்திறனாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1986) நிறைவேற்றப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஓ) நில அளவை எல்லைகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நில அளவை எல்லைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்

1986 மே 13] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வடிவு எண். 24|1986)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ''.

1923 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில அளவை எல்லைகள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 8/1923) 12ஏ பிரிவில் எல்லை வரையறுக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட நபர் அந்த ஆணைகளை, எதிர்த்து 3 மாத காலத்திற்குள்ளாக மேல்முறையீடு செய்து கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேல்முறையீடு செய்து கொள்வதற்கான 3 மாத கால அளவு அதிகமாக இருப்பதால் அந்தச் சட்டத்தில் 13 ஆவது பிரிவின்கீழ் எல்லைகள் குறித்து இறுதி அறிக்கைகள் வெளியிடப்படுவதை பெரிதும் தாமதப்படுத்துகிறது. இதனால் தற்போது செயல்பட்டு வரும் நில உடைமைப் பதிவு மேம்பாடு திட்டத்தை குறிப்பிட்ட கால அளவுக்குள் முடிப்பதில் கால தாமதம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே, அந்தத் திட்டத்தை விரைவு படுத்தும் நோக்கத்தோடு மேல் முறையீடு செய்து கொள்வதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள 3 மாத கால கெடுவை ஒரு மாதமாக குறைக்க கருதப்பட்டுள்ளது. இதற்கு ஏற்ப இந்தச் சட்டத்தின் 12ஏ பிரிவு திருத்தி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள விதிமுறைகளின் படி எல்லை வரையறை செய்யப்படுவதை எதிர்த்து மேல் முறையீடு செய்து கொள்ள வழி இருக்கிறது. ஆனால், 2-ஆவது மேல் முறையீடு சமர்ப்பிக்கவோ அல்லது தாமாக மறு விசாரணை செய்யவோ சட்டத்தில் தற்போது விதிமுறை எதுவும் இல்லை. மேல் முறையீடு மனுவின் மீது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை எதிர்க்க பாதிக்கப்பட்ட நபர் நீதிமன்றத்தில் நிவாரணம் பெறத் தான் வழி இருக்கிறது. மேல் முறையீடு செய்து கொள்வதற்கான காலக் கெடுவைக் குறைக்க இருப்பதால் பாதிக்கப்பட்ட நபருக்கு அவர் தம்முடைய தரப்பிலே எடுத்துக் கூறும் மேலும் ஒரு வாய்ப்பினை அளிப்பது அவசியம் ஆகும். காலக் கெடுவை குறைப்பதனால் மேல் முறையீடு மனுக்கள் மீது ஆணை பிறப்பிப்பதில் தவறு ஏதும் ஏற்பட்டுவிடக் கூடாது என்றும் அப்படி தவறு ஏதும் ஏற்பட்டால் அந்தத் தவறினைத் திருத்திக் கொள்ள வாய்ப்பு அளிக்கும் விதத்தில் இரண்டாவது மேல் முறையீடு '' செகண்டு அப்பீல் '' செய்து கொள்ளவும் உயர் அதிகாரிகள் தாமாகவும் மறு பரிசீலனைச் (Suo Motu Revision) செய்யவும் வகை செய்வது உசிதம் என்று கருதப்பட்டு இந்தச் சட்டத்திற்கு 2-ஆவது மேல் முறையீடு செய்து கொள்ள புதிதாக 12ஏ பிரிவும், உயர் அதிகாரிகள் தாமாகவே மறு பரிசீலனை செய்யக்கூடிய 12 பி, பிரிவையும் சேர்த்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதிதாக பிரிவுகள் சேர்க்கப்பட இருப்பதால் அந்தச் சட்டத்திலே 13 மற்றும் 14 பிரிவுகளில் முறையான திருத்தங்கள் இயற்றுவது என உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய தமிழ்நாடு சட்டத்தில் 14-ஆவது பிரிவில் காணப்படும் 1908 ஆம் ஆண்டு இந்திய ஆணை வரையறை சட்டம் மத்தியச் சட்டம் 11/1908 ரத்து செய்யப்பட்டு 1963 ஆம் ஆண்டு கால வரையறைச் சட்டம்,

*1986 ஆம் ஆண்டு சனவரி 29 ஆம் தேதியிட்ட அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

(மத்தியச் சட்டம் 36/1963) வும் ஆக்கப்பட்டு உள்ளதால் இந்தச் சட்டத்தில் 14-ஆவது பிரிவில் தகுந்த மாறுதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டமுன்வடிவுக்கு மத்திய அரசு இசைவு அளித்துள்ளது. தமிழ்நாடு 1923 ஆம் ஆண்டு நில அளவை மற்றும் எல்லைகள் சட்டமுன்வடிவு 19–3–1983 ஆம் நாள் அன்றும். 13–10–1984 ஆம் நாள் அன்றும் தமிழ்நாடுசட்டப் பேரவை கூட்டத் தொடரில் அறிமுகம் செய்யப்பட்ட போதிலும்

(முற்பகல் 11–20)

போதிய அவகாசம் இன்மை காரணத்தினால், அக்கூட்டத்தொடரில் விவாதிக்கப்படவில்லை. எனவே, நடப்பு கூட்டத்தொடரில் சட்டமுன்வடிவு பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டு இன்றைக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரும்படியாக அவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த நில அளவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மறு நில அளவை செய்யப்பட்டு, அதனால் பாதிக்கப்படக் கூடியவர்கள், மேல் முறையீடு செய்ய வேண்டுமானால், 12-ஏ பிரிவின் கீழ் 90 நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம் என்று இருக்கக் கூடிய அந்த வாய்ப்பை 90 நாட்கள் என்று இருப்பதற்குப்பதிலாக 30 நாட்களாகக் குறைத்துக் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தத் திருத்தத்தை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். குறிப்பாக இந்த நில அளவை மேம்பாட்டுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு, ஏராளமான குறைபாடுகளும், தவறுகளும் ஏற்பட்டிருக்கின்றன. சம்பந்தப்பட்ட நிலவுடைமையாளர்களை வைத்துக்கொண்டு, இந்த நில அளவை செய்யாமல், நிலம் ஒருவர் பேரில் இருந்து, அவர்கள் பதிவு வேறு ஒருவர் பேரில் செய்து, அந்த ரெக்கார்டுகள் அனுப்பப்படக்கூடிய நிகழ்ச்சிகள் எல்லாம் தமிழ்நாட்டில் நடந்து, ஏராளமான தவறுகள், குறைபாடுகள், புகார்கள் எல்லாம் அரசுக்கும் வந்திருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், இந்த மேல் முறையீடு செய்வதற்கு 90 நாட்களை 30 நாட்களாகக் குறைப்பது என்பது போதிய அவகாசம் இல்லாத நிலையை ஏற்படுத்துகிறது. ஆனால், நில அளவையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், மேல முறையீடு செய்வதற்கு இந்த 30 நாட்கள் அவகாசம் என்பது போதிய அவகாசம் அல்ல. எனவே, நான் நிதி அமைச்சரிடம் வேண்டுகோளாகக் கூறுவது, இந்த 90 நாட்களை 30 நாட்களாகக் குறைப்பதற்குப் பதிலாக, இடையில் இரண்டுமல்லாமல், 60 நாட்களாக ஆக்குகின்ற அளவில், இந்த அரசே இந்த மசோதாவிலே குறிப்பாக முன்மொழிந்து, 30 நாட்களுக்குப் பதிலாக 60 நாட்களாக, அதை ஆக்கி, மேல் முறையீடு செய்வதற்கு

1986 மே 13] [*திரு. கோ. வீரய்யன்]

அளிக்கக் கூடிய முறையீட்டிற்கு, 90 நாட்களாக இல்லாமல், 30 நாட்களாகவும் இல்லாமல், 60 நாட்களாக ஆக்கும் அளவில வாய்ப்பளித்தால், பாதிக்கப்பட்டவர்கள் மேல் முறையீடு செய்வதற்கு உதவியாக இருக்கும் வகையில, இந்தத் திருத்தத்தைச் செய்ய வேண்டுமென்று என்னுடைய கருத்தைச் கூறி முடிக்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நில அளவை மேம்பாட்டுத் திட்டம் என்பது, ஒரு நல்ல திட்டம் தான். ஆனால, இந்த நில அளவு என்பது அளக்கிற வரையிலும் ஏராளமான கோரிக்கை மனுக்கள் எல்லாம் வந்திருக்கின்றன. ஆனால், அளக்கப் போகிறவர்கள் நிலத்திற்குச் சம்பந்தப்பட்டவர்களைச் கூப்பிட்டு வைத்து, யார் யாருக்கு எந்த இடத்தில் நிலம் இருக்கிறது என்று பார்ப்பது கிடையாது. ஏனென்றால் ஒரு நேரத்தில, ஒரு சர்வே நம்பரில் உள்ள ஒருவரிடத்தில், இன்னொருவருடைய 10 சென்ட் நிலம் இங்கேயிருக்கும். அந்த கிராமத்தினுடைய கணக்குப் பிள்ளை யார் யாருக்கு எவ்வளவு நிலம் என்று குறித்துக் கொடுக்கின்றாரோ, அந்தக் கணக்கின்படிதான் இருக்கிறதே தவிர, உண்மையான நிலையில் யாருக்கு எவ்வளவு நிலம் என்பது கிடையாது. ஒழுங்கான முறையில அளக்கப்பட்ட நிலமாக இல்லை. இப்போது என்ன நடக்கிறது என்று சொன்னால், நிலத்தினுடைய சம்பந்தப்பட்டவர்கள் எல்லாம், அவர்களே போய், சர்வே நம்பர்களை வைத்து, அதனுடைய அடிப்படையில் அவர்களே அளக்கிறார்கள். அப்படி அளக்கிறபோது ஒருவருடைய நிலத்தில் இன்னொருவருடைய 10 சென்ட் நிலம் இருக்கிறது. அதை அளந்து, பட்டா புத்தகம் போட்டுக் கொடுத்து விடுகிறார்கள். இதனால் இவரும் அவரும் போலீஸ் ஸ்டேஷன், கோர்ட் இவற்றுக்கெல்லாம் போகும் அளவிற்கு இன்றைக்கு நிறைய புகார்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அதையெல்லாம் நிறுத்தி, நிலத்திற்கு சம்பந்தப்பட்டவர்களை வைத்து, இந்த நில அளவைச் செய்வதற்கு, ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அமைச்சரவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். அதற்கான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும்.

அதே நேரத்தில், 90 நாட்கள் அவகாசம் என்பதில், சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு காலத்தோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவிக்க வேண்டும். அவர்கள் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். இப்போது கொடுக்கப்படவில்லை. ஆகவே, இந்த 30 நாட்கள் என்பது போதாது. மாண்புமிகு உறுப்பினர் வீரய்யன் அவர்கள் சொன்னமாதிரி, இடையிலே 60 நாட்களாக அதை உயர்த்திக்கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நில அளவில் ஒழுங்குபடுத்தக் கூடிய அளவிற்கு விவசாயிகளுக்குப்

[திரு. பொ. உத்திராபதி] [1986 மே 13

பாதிப்பும், பிரச்சினைகளும் இல்லாத அளவிற்கு, இதை ஒழுங்கு படுத்துவதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கூறி, இந்த பில்லை ஆதரித்து, அமர்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா மீது ஓரிரண்டு கருத்துக் களைச் சொல்கிற நேரத்தில் இது நல்ல மசோதா என்று சொன் னார்கள். நிலத்தை அளந்து அறிவிப்பது என்பது நல்ல நோக்கம் தான். ஆனால், 90 நாட்களை, 30 நாட்களாகக் குறைப்பது என்பது மிகவும் சங்கடமானது ஆகும். காரணம், நிலத்தை அளப்பது என்பதில் வசதி வாய்ப்பு படைத்தவர்கள்தான் நிலத்தை அளக்க முன் வருகிறார்கள். அப்படி வசதியானவர் கள் நிலத்தை அளந்ததற்குப் பிறகு வறியவர்கள், ஏழைகளாக இருக்கின்றவர்களிடத்திலே அந்தச் சட்டங்கள் பயன்படுத்தப் படக்கூடாது. அவர்களிடத்திலே உண்மையான நிலங்களை அவர்களுக்கு சேரக்கூடாது என்பதிலே வசதி வாய்ப்புள்ளவர் கள் மிகவும் குறியாக இருக்கிறார்கள். அதே நேரத்தில், வசதி யானவர்கள், அரசியல் வாதிகளிடத்திலே அடைக்கலம் புகுந்து, அரசியல் செல்வாக்கினைப் பயன்படுத்தி, தாறுமாறாகக் காரியங்களை ஆற்றுவதற்கு நோக்கம் கொண்டு இருக்கிறார்கள். உங்களுக்கு மாதிரிக்குச் சொல்ல வேண்டுமானால், ஒரு ஊரில் கர்ணம் வி.ஏ.ஓ. அளந்து அவர்களிடத்திலே 90 நாள் வரை சால்ஜாப்பு செய்து, 90 நாட்கள் கடந்ததற்குப் பின்னாலே தான், அளந்ததே தெரிய வருகிறது. 90 நாளை வேண்டுமென்றே அவகாசம் செய்து, அப்பீல் செய்ய முடியாத நிலையை அவர்கள் உருவாக்கி வருகிறார்கள். நாங்கள் கேட்டுக் கொள்வதெல்லாம் நிலம் அளந்ததற்குப் பிறகு கல் பதித்த பிறகு, அவர்கள் முறை யிடுவதற்கு முன்னாலே அளந்த இடம் அல்லது அளக்கப்பட்டது என்ற விவரம் முழுமையாக வருவாய்த் துறையைச் சார்ந்தவர் கள் சென்று யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், மனு கொடுக் கிறார்கள் என்று அவர்கள் இரண்டு தரப்பிலேயும் கையெழுத்து பெற்று அளக்கப்பட்டதனுடைய உறுதிப் பாட்டை அவர் களிடத்திலே பெற்றால்தான் தெரிந்தால்தான், அப்பீல் முறையிடுவதற்குச் சரியாக இருக்கும். எனவே அந்தக் காரியங் களைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, நிலம் அளந்ததற்குப் பிறகு, தாசில்தார் சர்வேயரை அனுப்புகிறார். அவர்கள் எல்லாம் அளந்து, அடையாளமாக, அதற்கு குச்சி அடிக்கிறார்கள், முன்கூட்டியே. குச்சி அடிப்பது என்பதைத் தவிர்த்து அளந்த பிறகு உடனடியாக கற்களைப் பதித்து விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அப்படி பதிக்கப்பட்ட கற்களை என்ன செய்கிறார்கள் என்று கேட்டால் காவல் துறையிலே சொல்லி வைத்து விடுகிறார்கள். அரசியல் செல்வாக்கின் காரணமாக, வசதி வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், பணத்தின் காரணமாக, அந்த வசதிகளைப்

1986 மே 13] [திரு. மா. மணிமாறன்]

பெற்று விடுகிறார்கள். அவர்கள் அளந்ததற்குப் பிறகு, சர்வேயர், தாசில்தாரிடம் மனு கொடுத்து, ஆர். ஐ. சர்வேயரை அனுப்பி அளந்து, குச்சி அடித்ததற்குப் பிறகு, அடித்துச் சென்றவுடனே அடையாளம் தெரியாமல் செய்து விடுகிறார்கள் வசதி உள்ளவர்கள். இப்படிப்பட்ட இடையூறுகள் வந்து இன்றைக்கு ஏழை எளியவர்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை.

காவல்துறையினரிடம் சென்றால், மேல் முறையீட்டுக்குச் செல்லுங்கள் என்கிறார்கள். ஒரு தாசில்தார் அளப்பீடு செய்கிற நேரத்தில் சர்வேயரை அழைத்துச் செல்லும்போது உடனடியாக அவர்கள் கல் பதிப்புக்கு வேண்டியவற்றை பெற்று, உடனடியாக அளந்ததற்குப் பிறகு, அந்த உறுதியான கல்லைப் பதித்து அதற்கு தாசில்தார் உத்தரவாதம் கொடுத்து விடவேண்டும். அதன் மீது ஏதாவது குறை பாடுகள், மற்றவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் அல்லது வசதியுள்ளவர்கள் அந்தக் கல்லை அகற்றவோ குச்சியைப் பிடுங்கவே நடவடிக்கை எடுக்கும்போது அதை கிரிமினல் குற்றமாக்கி காவல்துறையில் புகார் செய்து, தாசில்தார் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

இன்னொன்று, அளக்கின்ற நேரத்திலே சர்வேயர் ஒன்று அளக்கிறார். வி.ஏ.ஓ. அவர்கள தனியாக அளக்கிறார். அதற்குப் பின்னாலே டெபுடி சர்வேயர் அளக்கிறார். பிறகு, டிஸ்டிரிக்ட் சர்வேயர் அளக்கிறார். இந்த 4 பேரும் கணக்கை ஒன்றாகக் கற்றவர்கள் தான். 4 பேரும் அளக்கிற போது, ஒருவருக்கொருவர் வித்தியாசம் வருகிறது. யார் பாதிக்கப்பட்டவர்கள் என்று பார்க்கிறார்கள். வசதியானவர்களிடத்திலே சாதகமாக அவர்களிடத்திலே கையூட்டைப் பெற்று விட்டு, அல்லது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு, முதலில் அளக்கிறதற்கும், இரண்டாவது அளக்கின்றதற்கும் வித்தியாசம் வருகிறது. பிறகு, தவறான அளப்பீடுகள் இருப்பதாக அறிவிக்கிறார்கள்.

எனவே, கணக்கை ஒழுங்காக படித்து இருந்து, முறையாக வேலை செய்து இருந்தால், வித்தியாசமான எல்லைகள் வருவதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? அப்படி ஏதாவது ஒரு அளப்பீடு செய்கிறபோது, பாதிக்கப்படுகிறது என்றால், இரண்டு பேருக்கும் வித்தியாசம் வருகிறது என்றால் ஒரே ஒரு அப்பீலோடு நிறுத்திக் கொண்டு, தாசில்தாரோ, ஆர்.டி.ஓ.வோ பக்கத்திலே இருந்து முறையாக அளந்து அவர்களிடத்திலே நிலங்களை ஒப்புவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சில இடங்களில் கற்கள் இல்லாமல், அடையாளம் இல்லாத இடங்களில், வசதியானவர்கள் சொத்துக்களை அபகரித்துக் கொள்கிறார்கள். மரம் இருக்கிறது என்றால், அதை முன்கூட்டியே தாசில்தார் அல்லது காவல் துறையினிடத்திலே,

[திரு. மா. மணிமாறன்] [1986 மே 13

அரசாங்கத்தினிடத்திலே சென்று செல்வாக்கைப் பயன்படுத்தி, அந்த மரத்தை அடியோடு வெட்டி, கொல்லைப் பக்கத்திலே குழி வெட்டி, மரத்தை ஒதுக்கிவிட்டு, இதுவும் என்னுடைய எல்லைதான் என்று சொல்கிறார்கள். அதற்கு அரசியல்வாதிகள் தலையீடு இருப்பதால் அதிகாரிகளும் 'ஆமாம்' என்று சொல்கிற நிலை இன்றைக்கு இருந்து வருகிறது. அப்படிப்பட்ட நிலை இருப்பதன் காரணமாக, ஏதாவது தவறு நடந்தால், அப்படிப்பட்ட சொத்துக்களை பறிமுதல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஏதாவது இடையூறுகள் இருந்தால் சொத்துக்களை அளப்பீடு இல்லாமல், தானாகவே அத்து மீறி செய்கிறபோது, தாசில்தாரால் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு, அவர் அளந்து, கற்களைப் பதித்து பிறகுதான் யாரும் பிரவேசிக்கிற நிலையை உருவாக்க வேண்டும்.

அளப்பீடு செய்வது, ஒரே ஒரு தடவைதான் அளப்பீடு செய்யப்பட வேண்டும். அதற்குப்பிறகு குச்சி அடிக்கின்ற பழக்கம் தவிர்க்கப்பட வேண்டும். அளப்பீடு செய்ததற்குப் பிறகு கற்களைப் பதித்து விட்டு தாசில்தார் உத்தரவாதம் கொடுத்தாக வேண்டும். யார் அகற்றினாலும் சரி, தாசில்தார் இருந்து அளந்து கற்களைப் பதித்ததற்குப் பிறகு அதை யார் அகற்றினாலும் அதை கிரிமினல் குற்றமாக கொண்டு வந்து தண்டனை கொடுக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் ஏழை எளியவர்களாக இருக்கிறவர்கள், நாதியற்றவர்கள், ஆதாவற்றவர்கள் நியாயம் பெற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். எனவே அப்படிப்பட்ட நிலைமைகளை அரசு உருவாக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

(முற்பகல் 11–30)

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். இத்தகைய நில அளவைகளைத் திருத்தியமைக்கின்ற பணிகளை மேற் கொள்ளுகின்ற பொழுது நிலத்தின் உரிமையாளர்கள் யார் என்பதைப் பற்றி எந்தவிதமான அக்கறையும் இல்லாமல், யாரோ ஒருவர் அனுபவிக்கிறார் என்றால் அவருக்குத் தாக்கீது அனுப்பப்படுகிறது. இதனால் உண்மையான உரிமையாளருக்கு இதைப் பற்றி மேல் முறையீடு செய்துகொள்வதற்கோ அல்லது முறையிட்டு தமக்குள்ள உரிமையை நிலைநாட்டிக் கொள்வதற்கோ வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. ஆகவே, இத்தகைய நில அளவையைத் தீர்மானிக்கின்ற பணியில் ஈடுபடுகின்ற பொழுது, நிலத்திற்கு உண்மையான சொந்தக்காரர்கள் யார் என்று தெரிந்து கொண்டு, அல்லது உண்மையான சொந்தக்காரர் இறந்து விட்டிருந்தால் அவருக்குச் சட்டபூர்வமான வாரிசு யார் என்பதைத் தெரிந்து கொண்டு அவருக்கும் தாக்கீது அனுப்பி, பிறகு ஆட்

சேபங்களைத் தெரிந்துக்கொண்டு அதை முறைப்படுத்தினால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் முக்கியமான நோக்கத்தைப் பற்றி நான் முதன் முதலிலேயே விளக்கிக் கூறினேன். ஆகவே, நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் அண்மைக் காலத்திலே நடை முறைக்குக் கொண்டு வரப்பட்டு, இந்தத் துறையில் செம்மை செய்யப்படும் நிலை நாடெங்கிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதை உறுப்பினர்கள் நன்கறிவார்கள். எட்டாயிரத்திற் கும் மேற்பட்ட நில அளவையாளர்கள இந்தப் பணியில் நான்சைந்து ஆண்டுக் காலத்திற்கும் மேலாக ஈடுபடுத்தப்பட்டு, மேலும் ஈடுபடுத்தப்படும் அளவிற்கு இந்த முறை மேற் கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே, இந்த நில அளவையைப் பொறுத்த வரையில அரசினிடத்தில கிடைக்கின்ற சர்வே எண் உரிமையாளர்கள் ஆகியவற்றை வைத்துத் தான் அளக்க முடியுமே தவிர, யாருக்குச் சொந்தம், எது என்பதைப் பற்றி நில அளவையாளர்கள் மற்றவர்கள் சொல்வது என்பது இயலாத ஒன்று. சிவில் கோர்ட்டின் மூலமாகப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். சில பலஇடங்களில் பினாமியாகக்கூட அமையும், சிலபல இடங்களில் அண்ணன் தம்பிக்குள் ஏற்பட்ட தகராறுகள், பங்காளிகளுக்கிடையிலே ஏற்படுகின்ற தகராறு போன்ற இவைகளைத் தீர்த்து வைப்பது என்பது நில அளவை யாளர்களுக்கும், இந்தத் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் அமையாது. அப்படியே தலையிட்டாலும்கூட அது சட்டப்படி பொருந்தி வராது. வேறு வகைகளிலேதான் அவைகள் தீர்க்கப் பட வேண்டும். ஆனால் இருக்கின்ற சட்டத்தினுடைய அடிப் படையில், சர்வேயின் அடிப்படையில் இதை அளந்து முறைப் படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டு, அந்த வகையிலே இதைத் துரிதப்படுத்த வேண்டுமென்பதாலும், அனாவசியமான காலத் தாழ்வு ஏற்படுகிறது என்பதாலும், நிலவுடைமைப்பதிவு மேம்பாட்டுத் திட்டத்தில் காலத்தாழ்வு ஏற்படுவதால்தான், 90 நாட்கள் என்பதை 30 நாட்களுக்குள்ளாக மேல முறையீடு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஆனால், ஏற்கனவே இருந்ததைவிட இப்பொழுது என்ன கூடுதலாக வசதி செய்திருக்கிறோம் என்றால், சாதாரணமாக 90 நாட் களில் மேல்முறையீடு செய்யும்பொழுது அடுத்த மேல் முறை யீட்டுக்கு ஏற்கனவே இருந்த சட்டத்தில இடமில்லை. ஏதாவது முறையீடு செய்ய வேண்டுமென்றால் வழக்கு மன்றத்திற்குத் தான் சென்று செய்ய வேண்டும். இப்பொழுது என்ன வழி என்றால், Second Appeal ஆகவே இதிலே ஏதாவது குறைபாடு இருந்தால் மேலும் ஒரு மேல் முறையீடு செய்யலாம் என்று சொல்லுகின்றபொழுது மாண்புமிகு உறுப்பினர் வீரய்யன் அவர்களும், உத்திராபதி அவர்களும் சொன்னது மாதிரி 60 நாள் என்பதுகூட வந்துவிடும். முதலில் 30 நாட்கள் தருகி

றோம். மசகன்ட் அப்பீல் என்று சொல்லுகின்ற பொழுது அதற்கும் ஒரு குறிப்பிட்ட நாட்களை எடுக்கும் நிலை ஏற்படும். ஆகவே, மேல் முறையீடு செய்வதற்கு வழி வகை தருகிறோம் என்பது மட்டுமல்லாமல், உயர் அதிகாரியேகூட தாமாகவே மறு பரிசீலனை செய்வதற்கான வழிவகையையும் செய்கிறோம். Suo motu revision இன் மூலமாகப் பரிசிலனை செய்யலாம் என் கிறோம். ஆகவே, இதிலே குழப்பத்திற்கு இடமில்லாத வகையிலே நில அளவையைச் செம்மைப்படுத்தி, சீர்படுத்திச் செய்ய வேண்டு மென்ற நோக்கத்திலேதான், அதற்கு உதவி செய்யும் முறையிலே தான் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம். ஆகவே, இதிலே ஏதாவது இடர்ப்பாடுகள் நடைமுறையிலே இருந்தால் அதைப் பற்றிப் பிறகு யோசிக்கலாம். இப்பொழுது இரண்டாவது முறையீடு வைத்திருப்பதால் மாண்புமிகு உறுப் பினர் கூறுவதைப் போன்று 60 நாட்கள் என்று கணக்கு வந்து விடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. முதலில் 30 நாட்கள், பிறகு 30 நாட்கள் என்று தானாகவே வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் குறிப்பிட் டதைப் போல, அளந்து சரி பார்த்து, கற்களை நட்டதற்குப் பிறகு அந்தக் கற்களை யாராவது மாற்றினால் அல்லது வேறிடத்தில் மாற்றி வைத்தால் அதற்கு இப்பொழுதே சட்டம் இருக்கிறது என்று கருதுகிறேன். கிரிமினல் குற்ற மாகத்தான் அது கருதப்படவேண்டுமென்றே நான் கருதுகிறேன். அப்படியில்லாவிட்டால் அதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் அரசே அளந்து, கற்களை நட்டதற்குப் பிறகு ஊரிலே இருப்பவர்கள், தங்கள் தங்கள் விருப்பப்படி கற்களை மாற்றினாலும் அல்லது ஆக்கிரமிப்பு செய்கின்ற முறையில் கையகப்படுத்துகின்ற நிலைமை ஏற்பட்டாலும் அவைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்பதை ஒப்புக்கொள்கிறோம்.

ஆகவே, இந்தச் சட்டத் திருத்தத்தினுடைய நோக்கம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அமைந்திருப்பதன் காரணமாக, அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப் பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு நில அளவை எல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 24/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

1986 மே 13] [பேரவைத் துணைத் தலைவர்]

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்றுநிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். :

"தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு நில அளவை எல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 24/1986) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஔ) சட்ட மன்ற (தகவின்மையைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகவின்மையைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண். 26/1986) ** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்",

இந்தச் சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோருகின்ற பொழுது, நான் குறிப்பிட விரும்புவது, 1967-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகவின்மையைத் தடுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1967) இரண்டாம் பிரிவின்படி அந்தச் சட்டத்தின் இணைப்புப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள பதவி இடங்களில் எதுவும், அதை வகிப்பவரைச் சட்டமன்ற உறுப்பினர் ஒருவராக தெரிந்தெடுக்கப்படுவதற்கு அல்லது உறுப்பினராக இருப்பதற்கு, தகவின்மையுறச் செய்தலோ, எப்போதுமே தகவின்மையுறச் செய்திருப்பதாகவோ கொள்ளப்படுதலாகாது. ஆதாயப் பதவிகள் குறித்த கூட்டுக்குழு ஏழாவது மக்கள் சபைக்களித்த தனது ஐந்தாம் அறிக்கையில் செய்துள்ள, பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு, நேரு இளைஞர் மையங்களுக்கான (நேரு யுவகேந்திரங்களுக்கான) மாநில

** 1986-ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.